**செய்தி வெளியீடு எண்: 662** **நாள்: 15.09.2018**

# <u>பதிவுத்துறை</u>

அனுப்புநர்
ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப.,
பதிவுத்துறைத்தலைவர்,
100, சாந்தோம் நெடுஞ்சாலை,
சென்னை – 28.

பெறுநர்
அனைத்து சார்பதிவாளர்கள்

## **எண்.55969/CS1/13, நாள்:14.9.2018**

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஸ்டார் 2.0 திட்டம் – ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான மென்பொருள் – முன் பதிவு செய்த வரிசையில் ஆவணப்பதிவு – அறிமுகம் – தொடர்பாக.

பார்வை: இவ்வலுவலக கடித எண்.55969/சிஎஸ்1/13, நாள்:23.1.2018

*****

ஒருங்கிணைந்த வலை அடிப்படையிலான ஸ்டார் 2.0 திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12.2.2018 அன்று துவக்கி வைக்கப்பட்டு சராசரியாக ஒரு நாளைக்கு 10,000 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறது. அதனுடன் இணைந்த சேவைகளான வில்லங்கச்சான்று, ஆவண நகல் வழங்குதல் போன்றவை திறம்பட செயல்படுத்தப்படுகிறது. இந்நிலையில் 12.9.2018 அன்று ஒரு சாதனை அளவாக 18,930 ஆவணங்கள் ஸ்டார் 2.0 மென்பொருள் வழி பதிவு செய்யப்பட்டுள்ளது.

Verified @ RealEstate ™

பதிவுத்துறை பணியாளர்கள் அனைவரின் ஒத்துழைப்பினால் ஸ்டார் 2.0 திட்டம் சிறப்பாக மேம்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்படுத்தப்பட்டு மாநிலத்திற்கே முன் மாதிரியாக அமைந்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "**நல் ஆளுமை விருது -2018**" –ஐ பெற்றுள்ளது. மேலும், மென்பொருள் தொடர்பான பின்னூட்டங்கள், அனைத்து தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்டு மென்பொருள் நாளுக்கு நாள் மேம்பாடு செய்யப்பட்டு வருகிறது. எந்த ஒரு மென்பொருளின் வெற்றியும் அந்த மென்பொருளின் பயன்பாட்டு எளிமையை பொறுத்தே அமைகிறது என்பதை அனைவரும் அறிவோம். ஸ்டார் 2.0 மென்பொருள் தற்போது மிகவும் எளிமைப்படுத்தப்பட்டு ஒரு முன்மாதிரியான மென்பொருளாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதே வேளையில் ஸ்டார் 2.0 மென்பொருளின் மைய நோக்கமான சரியான நேரத்தில் சிரமமின்றி வரிசைக்கிரமாக பாகுபடற்ற சேவைகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

சார்பதிவாளர் அலுவலகத்திற்கு பதிவுத்துறையின் சேவைகளைப்பெற வரும் பொதுமக்களின் கூட்டமும், ஒழுங்கற்ற முறைமையும் ஒழுங்குபடுத்தப்பட்டு ஆவணங்கள் முன் பதிவு செய்த டோக்கன் வரிசையில் எந்தவித பாகுபாடுமின்றி பதிவு செய்யப்படவேண்டும் என்பதை கருத்தில் கொண்டும் பொதுமக்களுக்கு சேவைகளை வரிசைக்கிரமமாக வழங்குவதால்

பொதுமக்கள் மற்றும் அலுவலர்களின் நேரம் மிச்சமாகும் என்பதை கருத்தில் கொண்டும் தற்போது ஸ்டார் 2.0 மென்பொருளில் நடைமுறையில் உள்ள நாள் மற்றும் நேரம் முன் பதிவு செய்து ஆவணம் பதிவு செய்யும் நடைமுறையானது முன் பதிவு செய்த டோக்கன் வரிசையில் சேவை என்ற முறையில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டு 10.9.2018 முதல் 51 சார்பதிவாளர் அலுவலகங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்களால் பெறும் வரவேற்பு பெற்றுள்ளது.

இம்முறை 51 சார்பதிவாளர் அலுவலகங்களில் சிறப்பாக செயல்பட்டதைக் கருத்தில் கொண்டு இம்முறை **17.9.2018** முதல் மாநிலம் முழுமைக்கும் அமல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தை அனைத்து அலுவலகங்களிலும் அமல்செய்வதால் பதிவு நடைமுறையில் ஒரு வெளிப்படைத்தன்மை மற்றும் ஒழுங்கு ஸ்டார் 2.0 மென்பொருள் வழி உறுதி செய்யப்படுவதுடன் பொதுமக்களிடம் துறையின் நற்பெயரை .கொண்டு சேர்க்கவும் இயலும். இதன் தொடர்ச்சியாக கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

## முன் பதிவு செய்த டோக்கன் வரிசையில் ஆவணப்பதிவு முறையின் (First In First Out) அம்சங்கள்

**1.** டோக்கன்கள் முன்கூட்டியே 30 நாட்களுக்கு முன்பிருந்தே முன்பதிவு செய்யலாம். **2.** ஒரு வேலை நாளில் முன்பதிவு செய்த டோக்கன்களை வரிசைக்கிரமமாக முதலில் வருபவர்க்கு முதல் சேவை (First In First Out) என்ற முறையில் ஆவணப்பதிவு செய்யலாம்.

Verified RealEstate™

**3.** ஒரு நாளானது ஆறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு கீழ்க்கண்ட முறையில் டோக்கன்கள் முன்பதிவு செய்ய இணையதளத்தில் வசதி செய்யப்பட்டுள்ளது.

| **பகுதி எண்** | **நேரம்** | **டோக்கன்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| I | காலை 10 மணி முதல் 11 மணி வரை | 10 |
| II | காலை 11மணி நண்பகல் 12மணி வரை | 10 |
| III | நண்பகல் 12மணிமுதல்பிற்பகல் 1 மணி வரை | 10 |
| IV | பிற்பகல் 1 முதல் 1.30 மணி வரை | 5 |
| | உணவு இடைவேளை | |
| V | பிற்பகல் 2முதல் 3 மணி வரை | 10 |
| VI | பிற்பகல் 3முதல் 3.30 மணி வரை | 5 |
| | **மொத்தம்** | **50** |

**4.** ஒவ்வொரு நாளும் அன்றைய தினம் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் இணையதளத்தில் முன்பதிவு செய்யப்பட்ட வரிசையில் உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்களின் வேலைப்பட்டியலில் தோன்றும்.

**5.** உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்களின் வேலைப்பட்டியலில் தோன்றும் ஆவணங்களை முன்பதிவு செய்யப்பட்ட டோக்கன்கள் வரிசையில் எடுத்து பதிவு நடைமுறையை செயல்படுத்த வேண்டும்.

Verified RealEstate™

**6.** எந்த ஒரு பகுதியிலும் முன்பதிவு செய்யப்பட்ட டோக்கனுக்கான நபர் குறித்த நேரத்தில் வரவில்லை எனில் உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்கள் மென்பொருளில் உள்ள கீழ்க்கண்ட வரையறுக்கப்பட்ட காரணங்களில் தகுந்த காரணத்தை தெரிவு செய்துவிட்டு, பின்னர் அடுத்த டோக்கனுக்கான பதிவு நடவடிக்கையை தொடரலாம்.

**<u>தற்போது மென்பொருளில் தெரிவு செய்ய தரப்பட்டுள்ள காரணங்கள்</u>**

| வ.எண். | காரணம் |
|---|---|
| **1** | ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை |
| **2** | எழுதிக்கொடுப்பவர் வரவில்லை |
| **3** | எழுதிவாங்குபவர் வரவில்லை |
| **4** | சாட்சிகள் வரவில்லை |
| **5** | ஆவணத்தை செயல்படுத்துவதில் பிழை |

மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்கள் 1 முதல் 4 வரை உள்ள காரணங்களில் எதை தெரிவு செய்தாலும்  மென்பொருள் தானகவே அந்த முன்பதிவு டோக்கனை அடுத்த பகுதியில் கடைசி டோக்கனாக வைத்துவிடும். அந்த நேரத்திலும் அந்த டோக்கனுக்கான நபர் வரவில்லை எனில், அந்த டோக்கனை அந்த நாளின் கடைசி பகுதியில் கடைசி டோக்கனாக வைத்துவிடும். டோக்கன் எண் மாறாது. உதாரணமாக முதல் பகுதியில் இரண்டாவது டோகனுக்குரிய

Verified RealEstate™

நபர் உரிய நேரத்தில் வரவில்லை எனில் மேற்சொன்ன அட்டவணையில் உள்ள காரணங்களில் தகுந்த காரணத்தை தெரிவு செய்ததும், மென்பொருள் தானாகவே அந்த டோக்கனை இரண்டாவது பகுதியில் கடைசி டோக்கனாக வைத்து அந்த நேரத்தில் நடவடிக்கையை தொடரும் விதமாக மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன முறை அனைத்து பகுதிகளுக்கும் பொருந்தும். மேற்படி இரண்டாவது டோக்கனுக்கான நபர் இரண்டாவது பகுதியில் ஒதுக்கப்பட்ட நேரத்திலும் வரவில்லை எனில், மென்பொருள் அந்த டோக்கனை அந்த நாளின் கடைசி பகுதியில் கடைசி டோக்கனாக வைத்துவிடும். அந்த நபர் அந்த நாளில் வரவில்லை எனில் அந்த முன்பதிவு டோக்கனானது வேலை பட்டியலில் இருந்து முற்றிலுமாக நீக்கப்படும். இந்த டோக்கனை மீண்டும் உபயோகிக்க முடியாது. புதிதாக முன் பதிவு செய்து பதிவு செய்த வேலை நாளில் ஆவணத்தினை தாக்கல் செய்து பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்கண்ட அட்டவணையில் ”ஆவணத்தை செயல்படுத்துவதில் பிழை” என்ற காரணத்தை தெரிவு செய்யும் போது மென்பொருள் தானாக அந்த முன்பதிவு டோக்கனை வேலைப் பட்டியலில் இருந்து முற்றிலுமாக நீக்கி விடும். ஒரு ஆவணத்திற்கான பதிவு நடவடிக்கையைத் தொடரும் போது மென்பொருளில் ஏதாவது தவறு ஏற்படும்போது மட்டுமே இந்தக் காரணத்தைத் தெரிவு செய்யவேண்டும். இந்த டோக்கனை மீண்டும் பயன்படுத்த முடியாது.

Verified @ RealEstate

தவறான காரணத்தை தெரிவு செய்வதை தவிர்க்கும் விதமாக எச்சரிக்கை செய்தி திரையில் தோன்றுமாறு மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. வரும்காலத்தில் மென்பொருளில் தவறுகள் ஏதும் ஏற்படுவதில்லை என்ற நிலை உறுதி செய்யப்படும் போது இந்தத் தேர்வு முறை நீக்கம் செய்யப்படும்.

**7.** முன்பதிவு செய்த நபர் அந்த குறித்த நேரத்தில் வராத நிலையில் அதற்கான தகுந்த காரணத்தை மென்பொருளில் தெரிவு செய்யாமல் அடுத்த ஆவணப்பதிவிற்கான நடவடிக்கையை தொடர முடியாது.

**8.** அவ்வாறு தெரிவு செய்யப்பட வேண்டிய காரணம் அந்த முன்பதிவு டோக்கனுக்கு தொடர்பான தற்காலிக ஆவண எண்ணில் அந்த பயனரின் உள்நுழைவில் தோன்றும். **காரணத்தை தெரிவு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் தெரிவு செய்தல் வேண்டும். எந்த ஒரு அமைப்பும் இந்த காரணம் குறித்து கேள்வி எழுப்பினாலும், அதற்கான தகுந்த ஆதாரத்தினை அளிக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு செயல்பட அறிவிக்கப்படுகிறது.**

**9.** உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்களின் வேலை பட்டியலில் இருந்து அனுப்பப்படும் ஆவணங்களை பதிவு அலுவலர் மேற்சொன்ன முறையில் வரிசைக்கிரமமாக எடுத்து பதிவு மேற்கொள்ளலாம். வரிசைக் கிரமமாக எடுத்து மட்டுமே ஆவணப் பதிவைத் தொடர இயலும் வகையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

Verified RealEstate™

**10.** ஒரு நாளுக்குரிய அனைத்து முன்பதிவு டோக்கன்களுக்கும் பதிவு நடைமுறை விரைவாக முடிவுற்ற நிலையில் நேரம் இருப்பின் அடுத்த நாளில் முன்பதிவு செய்த டோக்கன்களை எடுத்து பதிவு நடைமுறையைத் தொடரலாம்.

**11.** உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்களின் வேலை பட்டியலில் தோன்றும் ஆவணங்களை முன்பதிவு செய்யப்பட்ட டோக்கன் வரிசையில் எடுத்து பதிவு நடைமுறையை செயல்படுத்தும் போது ஆவணப்பதிவு செய்ய இயலாத நிலை இருப்பின் மென்பொருளில் உள்ள மறுப்புச் சீட்டு வழங்கும் தெரிவிற்கு சென்று அதில் உள்ள கீழ்கண்ட காரணங்களில் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து மறுப்புச் சீட்டு வழங்க வேண்டும். இந்த தெரிவைத் தேர்ந்தெடுத்து மறுப்புச் சீட்டு அச்சுப் பிரதி எடுத்து வழங்கிய பின் அடுத்த டோக்கனை எடுத்து பதிவு நடைமுறையைத் தொடரலாம்.

Verified @ RealEstate ™

## மறுப்புச் சீட்டு வழங்க வேண்டிய காரணங்கள்

| வ.எண். | காரணம் |
|---|---|
| 1. | ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை |
| 2. | அங்கீகரிக்கப்படாத/ வரன்முறைப்படுத்தப்படாத வீட்டுமனை |
| 3. | ஆவணத்திற்கான கட்சிக்காரர் நேரில் தோன்றவில்லை |

| | |
|---|---|
| 4. | பதிவுச் சட்டம் 22-ன் படி சொத்து விவரம் தெளிவாக விவரிக்கப்படவில்லை |
| 5. | அரசு/ இந்து அறநிலைய ஆட்சித்துறை/ வஃக்ப் வாரியம்/ பூமிதான நிலம்/ பஞ்சமி நிலங்கள் |
| 6. | வாரிசு மற்றும் இறப்புச் சான்றிதழ் தாக்கல் செய்யப்படவில்லை |
| 7. | பட்டா/ வீட்டு வரி இரசீது தாக்கல் செய்யப்படவில்லை |
| 8. | இதர காரணங்கள் |

**12.** உரிய நபர்கள் அலுவலகம் வந்து ஆவணம் தாக்கல் செய்த பின் ஆவணம் பதிவு செய்ய இயலாத நிலை இருப்பின் மென்பொருளில் மறுப்புச் சீட்டு உரிய காரணத்தைத் தெரிவு செய்து அச்சுப் பிரதி எடுத்து பதிவு அலுவலரின் கையொப்பத்துடன் வழங்க வேண்டும். ஆவணம் பதிவு செய்ய இயலாத நிலை இருந்து உதவியாளர்/இளநிலை உதவியாளர்/தகவல் தொகுப்பு பணியாளர்கள் உரிய மறுப்புச் சீட்டு தெரிவை தேர்வு செய்யாமல் தொடர்ந்து விட்டாலும் மீண்டும் மறுப்புச் சீட்டு வழங்கும் வசதி பதிவு அலுவலரின் உள்நுழைவிலும் உள்ளது.

மேற்சொன்ன முறையை எவ்வித சிரமுமின்றி கையாள மாவட்டப் பதிவாளர்கள் பதிவு அலுவலர்களுக்கு உரிய பயிற்சியை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும், மேற்சொன்ன முறையானது **17.9.2018** முதல் அமல்படுத்தப்படவுள்ளதை பதிவு அலுவலர்கள் ஆவண எழுத்தர்கள் / வழக்கறிஞர்களுக்கு தெரிவித்து இம்முறையை செவ்வனே செயல்படுத்த ஊக்குவிக்கவேண்டும். பதிவு அலுவலர்கள் விரைவாக இது குறித்து அனைத்து தரப்பினருக்கும்

Verified RealEstate ™

விழிப்புணர்வு ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க கோரப்படுகிறது. அனைத்து தரப்பினருக்கும் இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு ஏதுவாக அனைத்து பதிவு அலுவலர்களும் இந்த சுற்றறிக்கையினை பொதுமக்களும் அறியும் வண்ணம் தங்கள் அலுவலக அறிவிப்பு பலகையில் வெளியிட அறிவுறுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட அனைத்து பதிவு அலுவலர்களும் ஒத்துழைப்பு நல்கவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**பதிவுத்துறைத் தலைவர்.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**

Verified RealEstate™